**கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை மற்றும் அதன் விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுக்காப்பு நலன் திட்டம் மற்றும் கடற்றொழில் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டம் - 2021**

..................................................................................................................

1. **நிதிக்கூற்றுக்கள்**

.................................

1.1 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

.................................................

கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையினதும் அதன் விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டத்தினதும் கடற்றொழில் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டத்தினதும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒன்றிணைந்த நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து சபையின் மற்றும் அதன் தொகுதியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

.....................................................................

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 **நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பு**

..........................................................................................................................

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் மற்றும் அதன் தொகுதியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை மற்றும் அதன்

தொகுதியினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் மற்றும் அதன் தொகுதியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

.........................................................................................................................................

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் மற்றும் அதன் தொகுதியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என

நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் மற்றும் அதன் தொகுதியின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயறப்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 சபையின் நிதிக்கூற்றுக்கள்

#### 1.5.1.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையற்ற சொத்துக்களின் வினைத்திறனான ஆயுட்காலத்தை மீளாய்வு செய்யாததன் காரணமாக முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்திருந்த போதிலும் இன்னும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 32,781,134 | முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்துள்ள சொத்துக்களுள் பயன்படுத்தக்கூடிய சொத்துக்களைப் போல பயன்படுத்த முடியாத சொத்துக்களும் காணப்பட்டன. அச்சொத்துக்களை மீண்டும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந் | வினைத்திறனான ஆயுட் காலத்தினை மீளாய்விற்கு உட்படுத்தி நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கிரயமான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் வினைத்திறனான ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட தவறினை இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் பிரகாரம் திருத்தம் செய்து சரியான இயலளவுப் பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தும் நடைமுறையில் மீண்டும் மதிப்பீடு செய்து கணக்குவைக்க முடியாததுடன் நீண்டகாலமாக பழைய மனைப் பொருட்கள், கணனிகள், மென்பொருட்கள், அலுவலக உபகரணங்கள் முதலியன இவற்றுள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இச்சொத்துக்களை நாளதுவரையாக்குதல் புதிய துணைக்கருவிகளைப் பொருத்துதல் முதலியனவற்றினை மேற்கொள்ள முடியாதிருந்தது. பயன்படுத்தும் நிலையில் காணப்படாத சொத்துக்களை எதிர்காலத்தில் நீக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் விவசாய ஓய்வூதியக்காரர்களுக்கான மரண பணிக்கொடையினை காப்பீட்டு மதிப்பீட்டின் மூலம் கணிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,146,766,066 தொகையான விவசாயிகளின் மரண பணிக்கொடை நிதியம் தொடர்பான பொறுப்புக்கள் காப்பீட்டு மதிப்பீட்டின் மூலம் கணிப்பீடு செய்து காலரீதியாக நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | விவசாய ஓய்வூதிய திட்டத்திலிருந்து தவணைப் பணத்தை பெற்று இந்த நிதியம் அமுல்ப்படுத்தப்படுவதுடன் ஆண்டில் மேற்கொள்ளப்படுகின்ற இளைப்பாற்று பணிக்கொடை கொடுப்பனவு இந்த நிதியத்திற்கு வரவு வைக்கப்படும். எதிர்காலத்தில் புதிய ஓய்வூதியத் திட்டத்தை ஆரம்பிப்பதோடு வருடாந்த காப்பீட்டு மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மரணப் பணிக்கொடை நிதியம் தொடர்பான பொறுப்புக்கள் காப்பீட்டு மதிப்பீட்டின் மூலம் கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்படுகின்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலுக்கான படிவத்தின் கட்டமைப்பிற்குள் தரமான ஒரு | கருத்துரைகள் தரப்படவில்லை. | ஒத்த கொடுக்கல் வாங்கல்களும் ஏனைய சம்பவங்களின் நிதி விளைவுகளை அளவீடு செய்தல் மற்றும் வெளிப்படையாக சுட்டிக்காட்டுதல் |

| | | |
|---|---|---|
| பண்பாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஒப்பீட்டுரீதியான கருதுகோளின் பிரகாரம் ஒத்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ஏனைய சம்பவங்களின் நிதி விளைவுகளை அளவீடு செய்தல் மற்றும் வெளிப்படையாகக் காட்டுதல் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் முழுவதையும் ஒன்று சேர்க்கும் வகையிலும் காலப்பகுதி முழுவதும் அந்த கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்கு ஒன்று சேர்ந்த வகையில் செய்யப்பட வேண்டிய போதிலும் விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் கடற்றொழில் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் கீழ் நிருவாகச் செலவுகளுக்காக முறையே பொதுத் திறைசேரியிடமிருமூந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 247,000,000 மானியம் அரசாங்க மானியமாக ரூபா 1,500,000 மானியம், ஏனைய வருமானமாக இரண்டு வருமான மூலங்களின் கீழ் தொகுதியின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | | கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் முழுவதையும் ஒன்றுசேர்க்கும் வகையில் காலப்பகுதி முழுவதும் அந்த கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்கு ஏனைய கணக்காய்வு செய்யாப்படும் நிறுவனங்களுக்குமாக ஒன்றுசேர்ந்த வகையில் இடம்பெறுதல் வேண்டும். |

### 1.5.1.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மஹியங்கனை எம்பிலிபிடிய மற்றும் அனுராதபுரத்தில் பேணப்படுகின்ற 3 உத்தியோகபூர்வ இல்லங்கள் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான 76.6 பேச்சர்ஸ் காணியும், எம்பிலிபிடிய உத்தியோகபூர்வ இல்லத்தின் கட்டிடங்களினதும் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு | பெறுமதிகளை மதிப்பீடு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் துரிதமாக அந்த நடவடிக்கைகளை முடிவுறுத்தி மதிப்பீட்டுப் பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கட்டிடங்களை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை ல. | | |
| (ஆ) | ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பிடமிருந்தும் மஹாவெலி, கமத்தொழில், நீர்ப்பாசனம், மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சிடமிருந்தும் விவசாய தரவு முறைமையினை கட்டியெழுப்புவதற்காக 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 14,715,617 நிதி வசதிகள் சபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டுவரை சபையினால் ரூபா 23,009,698 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. அந்த பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் வருமானங்களும் செலவுகளுமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்படாது செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவில் நிதி நிறுவனங்களினால் தீர்த்து வைக்கப்படாத மீதி மாத்திரம் பெறவேண்டிய மீதியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | இத்தகவல் முறைமையானது கமத்தொழில் அமைச்சின் தலைமைத்துவத்தில் மேற்கொள்ளப்படுவதுடன் உரிய செலவுகள் கமத்தொழில் அமைச்சினூடாக மீளளிப்புச் செய்யப்படும். இது தொடர்பான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் கணக்குப் பதிவுகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | செயற்திட்டத்திற்குரிய வருமானங்களும் செலவுகளும் சரியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுதல் வேண்டும். |

**1.5.2 விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள்**

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்**

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பாடுள்ள பங்களிப்பாளர்கள் மற்றும் விவசாய ஓய்வூதியக்காரர்களின் ஓய்வூதிய பொறுப்பு காலரீதியாக மேற்கொள்ளப்படுகின்ற காப்பீட்டு மதிப்பீட்டின் மூலம் கணிப்பிட வேண்டிய போதிலும் 2007 ஆம் ஆண்டின் பின்னர் தொடர்ச்சியாக காப்பீட்டு மதிப்பீடு மேற்கொள்ளப்படாது ஓய்வூதியப் பொறுப்பு | 2007 ஆம் ஆண்டின் போது விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்தின் பொறுப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட காப்பீட்டு மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு ஓய்வூதிய பொறுப்பு கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஓய்வூதிய திட்டமானது சுயநிதியினை அடிப்படையாகக் கொண்டதல்லாததனால் | ஓய்வூதிய பொறுப்பானது காப்பீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் காலரீதியாக மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கணிப்பிடப்பட்டிருந்ததுடன் அவ்வாறு கணிக்கப்பட்ட ஓய்வூதிய பொறுப்பு 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 78,184,784,968 ஆக இருந்தது. மேலும் இக்கடப்பாட்டினைத் தீர்த்துவைப்பதற்கு போதியளவு முதலீடு சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இத்திட்டத்திற்காக புதிய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படாததுடன் சுய நிதியின் அடிப்படையில் அமுல்ப்படுத்தக்கூடிய புதிய திட்டம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. பழைய திட்டத்தின் கொடுப்பனவுகள் வருடாந்த பாதீட்டினூடாக வருடாந்தம் கொடுப்பனவு செய்யப்படுவதுடன் புதிய விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்தின் காப்பீட்டு மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்கின்ற சந்தர்ப்பத்தில் பழைய திட்டத்தினதும் காப்பீட்டு மதிப்பீடு பெற்றுக்கொள்ளுதல் இடம்பெறும். | |

**(ஆ) கணக்கீட்டு குறைபாடுகள்**

..............................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| .................................. | ................................ | ............................ |
| (i) செயற்பாடான பங்களிப்பாளர்களிடமிருந்து கணக்காண்டிற்காக கிடைக்க வேண்டிய பணத்தின் பெறுமதியை இனங்காணக்கூடிய வகையில் ஓய்வூதியத்திட்டத்திற்காக இணைந்துகொண்ட திகதியும் உரிமைகோரும் திகதியையும் உள்ளடக்கிய பங்களிப்பாளர்களின் பெயர்ப்பட்டியலை முழுமையாகவும் நாளதுவரையாகவும் பேணாமையால் பங்களிப்பாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானமானது அட்டுறு அடிப்படைக்குப் பதிலாக காசு அடிப்படையில் ரூபா | தவணைப் பணங்களை கணனிமயப்படுத்துவதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளதனால் செல்லுபடியற்ற தாக்கப்பட்ட மற்றும் செயற்பாடற்ற பங்களிப்பாளர்களை முறைமையினூடாக பெற்றுக்கொள்வது சிக்கலாக உள்ளது. இந்நிலைமையை முன்னிட்டு தவணைப் பணத்தை சுயமாக கணனிமயப்படுத்துவதற்காக அரசாங்க வணிக வங்கியின் மூலம் தவணைப் பணங்களை அறவீடு செய்து அந்த தவணைப் பணங்களை எங்களது தரவு | அனைத்து பங்களிப்பாளர்களினதும் பெயர்ப்பட்டியலை முழுமையாகவும் நாளதுவரையாகவும் பேண வேண்டியதுடன் பங்களிப்பு பணத்தை அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 112,139,246 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முறைமைக்கு தொடர்புபடுத்தும் விசேட வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | |
| (ii) | 2021 ஆம் ஆண்டின் போது 161 நபர்களுக்குத் தகமையுள்ள தேறிய தவணைப்பண கொடுப்பனவு, அதற்குரிய வட்டி, பலவீனக் கொடுப்பனவு, மரண பனிக்கொடைப் பணம் என்பவற்றிற்காக எழுதிய ரூபா 1,304,300 பெறுமதியான 161 காசேலைகள் பணம் பெறுபவர்களால் உரிமை கோரப்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்படாது வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. | தேறிய தவணைப் பணக் கொடுப்பனவு மரணப் பணிக்கொடை, பலவீன பிரதிபலன் கொடுப்பனவு என்பவற்றிற்காக காசோலைகள் வழங்கப்பட்டு கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பிக்காத காசோலைகளின் காலம் காலாவதியாகையில் அக்காசோலைகளை வருமானத்திற்கு எடுத்தல் இடம்பெறுவதுடன் அக்காசோலைகளுக்காக மாவட்ட அலுவலகங்களினூடாக எங்களுக்கு கிடைத்த வேண்டுதல்களின் பிரகாரம் மீண்டும் காசோலைகள் வழங்கப்படும் காலாவதியான காசோலைகள் நிர்ணயிக்கப்பட்டவாறு ஏடுகளில் பதியப்படுவதுடன் தேவையான சந்தர்ப்பத்தில் பங்களிப்பாளர்களால் உரிமை கோருதல் இடம்பெறும் சந்தர்ப்பத்தில் உரிய மாவட்ட அலுவலகங்களின் சிபார்சின் பிரகாரம் மீண்டும் பணம் பெறுபவர்களுக்கு காசோலைகள் வழங்கப்படுவதுடன் அக்காசோலைகளில் பணமாக மாற்றப்படாத காசோலைகள் தொடர்ச்சியாக கணக்கிணக்கத்திற்கு உட்படுத்தப்படும். | வருமானத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு முன்னர் பணம் பெறுபவர்கள் உரிமை கோரவில்லை என்பது உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | முன்னைய ஆண்டில் விவசாயிகள் ஓய்வூதியத்திலிருந்து விவசாயிகளுக்கு செலுத்தப்படாத ரூபா 107,929 தொகையை மீளாய்வாண்டில் மீண்டும் ஏடுகளுக்கு கொண்டுவரும் போது தபால் அலுவலகக் கணக்கிற்கு வரவு வைத்து செலுத்த வேண்டிய விவசாயிகள் ஓய்வூதிய கணக்கிற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக பிழையாக ஆண்டிற்கான விவசாயிகள் ஓய்வூதிய செலவுக் கணக்கிற்கு செலவு வைத்ததனால் ஆண்டிற்கான மிகை அத்தொகையால் அதிகரித்திருந்தது. | சபைக்கு கிடைக்க வேண்டிய செலுத்தப்படாத ஓய்வூதியப் பணம் அலுவலகங்களின் மாவட்ட கணக்காளரின் உறுதிப்படுத்தலின் அடிப்படையில் முன்னைய ஆண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டிற்குள் பணம் பெற்றுக்கொள்ளப்படும் போது முன்னைய ஆண்டில் உறுதிப்படுத்தப்படாத ரூபா 107,929 பணம் கிடைத்திருந்தது. அதற்கிணங்க கணக்கீடு செய்யப்பட்ட கிடைக்க வேண்டிய மீதியானது அத்தொகையால் குறைவடைந்துள்ளது. கிடைத்த பணமானது கிடைக்க வேண்டிய செலுத்தப்படாத ஓய்வூதியக் கணக்கிற்கு (தபால் அலுவலகம்) செலவு வைத்து மிகைகள் விவசாயிகள் ஓய்வூதிய செலவுக்கு கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | இடம்பெற்றுள்ள பிழையை சரிசெய்தல் வேண்டும். |

**(இ) நிதியம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| திட்டத்தின் தேறிய சொத்துக்கள் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 81,967,040,765 மறை மீதியினைக் கொண்டிருந்ததுடன் நடைமுறைச் சொத்துக்களை மிகைத்த நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 4,779,128,996 ஆக இருந்தது. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது விவசாயிகளின் பங்களிப்பு முறையே ரூபா 19,316,409 மற்றும் ரூபா 15,746,696 ஆக இருந்ததுடன் விவசாயிகள் ஓய்வூதியக் | விவசாயிகள் ஓய்வூதியப் பொறுப்பு வருடாந்தம் அதிகரிப்பதுடன் திட்டத்தினுள் முதலீடு இல்லாமை இந்த திட்டத்தின் பிரதிபலன் தவணைப் பணத்தை அதிகரிக்காது பல சந்தர்ப்பங்களில் அரசாங்க கொள்கையினால் அதிகரித்ததனால் இந்நிலைமை | திட்டத்திற்கு காப்புறுதியானவர்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு முறையே ரூபா 4,502,560,108 மற்றும் ரூபா 3,719,165,280 ஆக இருந்தது. ஓய்வூதியக் கொடுப்பனவுக்காக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 4,450,949,000 மற்றும் ரூபா 3,753,000,000 தொகைகள் திறைசேரியின் மூலம் கிடைத்திருந்ததுடன் திறைசேரியின் பங்களிப்பு இல்லாமல் திட்டத்தினை பேண முடியாத நிலை காணப்பட்டது. | உருவாகியுள்ளதுடன் ஒவ்வொரு ஆண்டின் போதும் அரசாங்க பாதீட்டின் மூலம் பணத்தை ஒதுக்கீடு செய்து விவசாயிகள் ஓய்வூதியம் கொடுப்பனவு செய்யப்பட்டு வருகின்றது. | |

**1.5.3 கடற்றொழில் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள்**

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (i) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 43 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது காசு அல்லது காசுக்குச் சமனானவைகளை ஈடுபடுத்துதல் அவசியமற்ற முதலீட்டு மற்றும் நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் காசுப்பாய்ச்சல் கூற்றிலிருந்து நீக்கப்பட வேண்டிய போதிலும் கடற்றொழில் ஓய்வூதியக்காரர்களுக்கான மரணப் பணிக்கொடை நிதியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 1,752,840 தொகையான பங்களிப்பு பிழையாக முதலீட்டு காசுப்பாய்ச்சலின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | கடற்றொழிலாளர்களின் மரணபணிக்கொடை நிதியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை பணமாக செலுத்தப்படாததனால் ஒதுக்கீடு செய்தலினை செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டுவதற்கு 2022 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்படும். | ஒதுக்கீடு செய்தலினை காசுப்பாய்ச்சலுக்கு எடுக்காதிருத்தல் வேண்டும். |
| (ii) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையற்ற சொத்துக்களின் வினைத்திறனான | தளபாடங்களும் பொருத்திகளும், கணனி துணைக்கருவிகள் முதலியன பயன்படுத்தப்பட்டிருந்தும் மதிப்பீடு செய்யப்பட்டு | முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்த சொத்துக்களை மீள்மதிப்புச் செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் இன்னும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 696,175 கிரயமான தளபாடங்களும் பொருத்திகளும், அலுவலக உபகரணங்கள், கணனி ஆகிய சொத்துக்களின் வினைத்திறனான ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட தவறினை இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் பிரகாரம் திருத்தம் செய்து சரியான இயலளவுப் பெறுமதியினை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வினைத்திறனான ஆயுட்காலத்தை மதிப்பீடு செய்ய முடியாதுள்ளது. அகற்றப்பட வேண்டிய நிலையில் காணப்பட்ட கணனி போன்ற உபகரணங்கள் நாளதுவரையாக்க முடியாத நிலையிலும் முழுமையான வினைத்திறனுடன் பயன்படுத்த முடியாத நிலையிலும் காணப்பட்டதனால் எதிர்காலத்தில் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (iii) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்பாடான பங்களிப்பாளர்கள் மற்றும் கடற்றொழில் ஓய்வூதியக்காரர்களின் ஓய்வூதியப் பொறுப்பு ரூபா 4,644,164,591 ஆகும். இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பாடான பங்களிப்பாளர்கள் மற்றும் கடற்றொழில் ஓய்வூதியக்காரர்களின் ஓய்வூதிய பொறுப்புக்களுக்காக காப்பீட்டு மதிப்பீட்டினை காலரீதியாக மேற்கொள்ள வேண்டிய போதிலும் 2007 ஆம் ஆண்டின் பின்னர் ஓய்வூதிய பொறுப்பு காப்பீட்டு மதிப்பீட்டின் மூலம் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2007 ஆம் ஆண்டிற்காக காப்பீட்டு மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு பொறுப்புக்கள் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் சபையின் சமூக பாதுகாப்பு திட்டம் மீளமைப்புச் செய்யப்பட்டதன் பின்னர் காப்பீட்டு மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஓய்வூதியப் பொறுப்பினை காப்பீட்டு மதிப்பீட்டிற்கு இணங்க காலரீதியாக கணிப்பீடு செய்தல் வேண்டும். |

**(ஆ) கணக்கீட்டு குறைபாடுகள்**

**.....................................**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| **.................................** | | **..............................** | **...........................** |
| (i) | கடற்றொழில் ஓய்வூதியப் பிரிவில் எந்த நேரடி கடமையினையும் நிறைவேற்றாத மூன்று உத்தியோகத்தர்களின் மீளாய்வாண்டிற்கான முழுமையான சம்பளம் மொத்தமாக ரூபா 1,979,712 திட்டத்தின் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இத்திட்டத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு இந்த உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் தற்பொழுது ஏனைய கடமைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். திட்டத்தின் கடமைகள் சுழற்சி முறையில் ஏனைய உத்தியோகத்தர்களாலும் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் இந்த உத்தியோகத்தர்களின் சம்பளம் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. போதியளவு ஊழியர்களை சேர்த்துக்கொண்டதன் பின்னர் திட்டத்திற்குரிய ஊழியர்களின் சம்பளம் திட்டத்தில் உள்ளடக்கப்படும். | திட்டத்திற்குரிய செலவுகளை மாத்திரம் கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ii) | கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் மாவட்ட கடற்றொழில் அலுவலகங்களின் மாவட்ட கடற்றொழில் செயற்திட்ட உத்தியோகத்தர்களால் ஓய்வூதிய பங்களிப்பு பணத்தை அறவீடு செய்யும் போது ஒரு தவணைப் பணத்திலிருந்து ரூபா 11 வீதம் அறவிடப்படுகின்ற தரகுப் பணம் இத்திட்டத்தின் ஒரு செலவாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் அந்த தரகுப் பணம் கடற்றொழில் ஓய்வூதிய பங்களிப்பு பணத்திலிருந்து கழித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மாவட்ட கடற்றொழில் அலுவலகத்தின் மூலம் அனுப்பப்பட்ட பணம் தவணைப்பணத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் தரகுப் பணத்தையும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடப்படுகின்ற தரகுப் பணத்தை கணக்கீடு செய்தல் வேண்டும். |

**(இ) கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது அறிக்கை**

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | துணை அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| 121 கடற்றொழில் காப்புறுதியாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பங்களிப்பு பணம் | 146,707 | 117,648 | 29,059 | சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து காசோலைகளும் வருமானமாக இனங்காணப்பட்டுள்ளதுடன் கணக்கிணக்கம் செய்யப்படாத பெறுவனவுகள் துரிதமாக கணக்கிணக்கம் செய்யப்படும் | வித்தியாசங்களை இனங்கண்டு சரி செய்தல் வேண்டும். |

**(ஈ) நிதியம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| திட்டத்தின் ஓய்வூதிய பொறுப்பு மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 4,644,164,591 ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டினை விட 9 சதவீத அதிகரிப்பாகும். அவ்வாறே திரண்ட நிதியத்தின் தேறிய சொத்துக்கள் நிலைமை ரூபா 4,103,708,674 மறைப் பெறுமதி வரை அதாவது முன்னைய ஆண்டினைவிட 12 சதவீதம் அதிகரித்திருந்ததனால் அதுவும் திட்டத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் தொடர்பாக பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது. | இத்திட்டமானது சுய நிதியின் அடிப்படையில் அமுல்ப்படுத்தப்படாததனால் இந்நிலைமை உருவாகியுள்ளது. அதற்கிணங்க வருடாந்தம் செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பொறுப்பு அதிகரித்து வருவதுடன் அதனால் தேறிய சொத்துக்களின் பெறுமதியும் குறைவடைந்துள்ளது. இதன் காரணமாக இத்திட்டத்திற்காக புதிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளல் அதிகரிக்கப்பட்டவில்லை. | திட்டத்திற்கு காப்புறுதியாளர்களின் பங்களிப்பினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

..........................................................................................

### 1.6.1 பெறவேண்டிய பணம்

.................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 02 ஆண்டுகளிலிருந்து 38 ஆண்டுகள் வரையான பழைய ரூபா 1,519,371 தொகையான உத்தியோகத்தர்களுக்கான சம்பள முற்பணம், கடன்கள் மற்றும் பல்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்ட முற்பண மீதியை மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட எந்த வகையிலும் அறவீடு செய்ய முடியாத கடன்களை பதிவழிப்பதற்காக பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டதுடன் ஏனைய சேவையை கைவிட்டுச் சென்ற ஊழியர்களிடமிருந்து அப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்கள் மற்றும் முற்பணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்தவேண்டிய பணம்

.................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 426,871 தொகையான மீளச் செலுத்த வேண்டிய கேள்வி வைப்புக்களின் பெறுமதி மீளாய்வாண்டின் இறுதிவரை தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | மீளச் செலுத்தப்பட்ட கேள்வி வைப்பு பண மீதியை மீண்டும் மீளாய்வு செய்து உரிய தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்தி அப்பணம் அவர்களால் முறைப்படியாக வேண்டிக் கொள்கையில் 2022 ஆம் ஆண்டின் போது செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதமின்றி தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

.....................................................................................................

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| ............................ | ..................... | ...................... | ..................... |
| 1999 இன் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி அதிகாரச் சட்டத்தின் 7 (அ) ஆம் பிரிவு | சபையினால் பேணப்பட்டு வந்த கெதட அருண காப்புறுதித் திட்டம் தொடர்பாக 8,185 விவசாயிகளுக்கு 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது செலுத்தப்பட்ட ரூபா 70,800,200 இழப்பீட்டுப் பணமானது கணக்கு இலக்கம், விவசாயிகளின் பெயர், அடையாள அட்டை இலக்கம் என்பன ஒத்திருக்காமையின் காரணமாக வணிக வங்கியின் மூலம் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன் உரிய விவசாயிகளை இனங்கண்டு அம்மீதியை தீர்த்துவைப்பதற்கு 05 ஆண்டுகளாக சபைக்கு முடியாதிருந்தது. | கொடுப்பனவு நிராகரிக்கப்பட்ட விவசாயிகளுக்கு திருத்திய பதிவேட்டினைத் தயாரித்து அனுப்புமாறு கமத்தொழில் சேவை நிலையங்களுக்கும் மாவட்ட அலுவலகங்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கிணங்க கிடைத்த திருத்திய பதிவேட்டிற்காக செலுத்தப்பட்டிருந்தும் இழப்பீட்டுப் பணத்தை மீள உரிமைகோராத விவசாயிகளின் ரூபா 70,800,200 பணம் விவசாயிகளால் தொடர்ச்சியாக உரிமை கோரப்படாததனால் கமத்தொழில் காப்புறுதி நிதியத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அப்பணத்தை கமத்தொழில் தரவு முகாமைத்துவ முறைமையை உருவாக்குவதற்காக வழங்குவதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. | விவசாயிகளை இனங்கண்டு தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.8 நிதி முகாமைத்துவம்

..................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ................................ | ............................. | ........................... |
| மீளாய்வாண்டின் போது திட்டத்தின் மூலதனச் செலவுகளையும் | மூலதனச் செலவுகளுக்காக ஆண்டின் போது நிதி | திறைசேரியிடமிருந்து கிடைத்த நிதி |

| | | |
|---|---|---|
| விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டத்தின் நிருவாகச் செலவுகளையும் மேற்கொள்வதற்காக திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 267,000,000 பணத்தில் ரூபா 219,074,225 செலவு செய்ததன் பின்னர் எஞ்சியுள்ள ரூபா 47,925,775 தொகை உத்தேச குறிக்கோளுக்கு முரணாக திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. | ஆண்டு முடிவில் கிடைத்ததனால் 2022 ஆம் ஆண்டின் போது உரிய பெறுகை நடவடிக்கைகளை மேற்கொண்டு கொடுப்பனவு செய்யப்படும். செயற்பாட்டு மற்றும் நிருவாகச் செலவுகளுக்காக ரூபா 247,000,000 பணம் விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்ததுடன் ஆண்டு முழுவதும் செய்யப்படுகின்ற சில செலவுகள் சபையின் பிரதான திட்டமான விவசாய காப்புறுதித் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டதுடன் பின்னர் விவசாயிகள் ஓய்வூதியத்திட்டத்திற்குரிய செலவுகள் இரண்டு திட்டங்களுக்குமிடையே கொடுக்கல் வாங்கல்கள் பரிமாற்றம் செய்யப்படுகின்ற நடைமுறைக் கணக்கினூடாக அப்பணம் முறைப்படியாக விவசாய ஓய்வூதியத் திட்டத்தில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | ஏற்பாடு உரிய செயற்பாடுகளுக்கு மாத்திரம் ஈடுபடுத்தப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு
..............................

### 2.1 நிதி விளைவுகள்
..................................

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,779,698,659 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 1,187,412,073 ஆகும். அதற்கிணங்க நிதிவிளைவுகளில் ரூபா 592,286,586 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றமானது இழப்பீட்டுக் கொடுப்பனவு 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 263,883,675 ஆல் குறைவடைதல் மற்றும் மீள் காப்புறுதியிலிருந்து 2019 ஆம் ஆண்டில் கிடைக்கவேண்டியிருந்த ரூபா 163,619,152 தொகையான மீள்காப்புறுதி இழப்பீட்டுப் பணத்தை 2020 ஆம் ஆண்டில் பதிவழித்தல் மற்றும் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிகையில் விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டத்தின் நிருவாகச் செலவுகளுக்கான திறைசேரி மானியம் ரூபா 97,000,000 மிகையாக கிடைத்தமை பிரதான காரணமாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

.....................................

### 3.1 முகாமைத்துவத்தின் செயற்திறனின்மைகள்

...........................................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| .................................. | .............................. | ........................... |
| மீளாய்வாண்டின் இறுதியில் சபையின் அங்கீகரித்த 18 பதவிகளில் 14 பதவிகளுக்காக 156 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் தலைமை அலுவலகம் மாவட்ட அலுவலகங்கள் மற்றும் வெளிக்கள கடமைகளை நிறைவேற்றுவதற்கு இந்த வெற்றிடங்கள் தடையாகக் காணப்பட்டன என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | 2021 ஆம் ஆண்டின் போது ஆட்சேர்ப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் அதன் போது உதவிப் பணிப்பாளர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய சில பதவிகளுக்காக ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன் ஏனைய ஊழியர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளல் அரசாங்கத்தினால் நிறுத்தப்பட்டுள்ளதனால் ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளல் தாமதமடைந்துள்ளது. எதிர்காலத்தில் அங்கீகாரம் கிடைத்த உடன் தேவையான ஊழியர்களை சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணப்படுகின்ற வெற்றிடங்களை மீளாய்வு செய்து அத்தியாவசியமான வெற்றிடங்கள் நிரப்பப்படுதல் வேண்டும். |